## ஆர்டர்லி முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது!

# சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு அறிக்கை!

### நீதிபதிகள் பாராட்டு!

சென்னை, பிப். 1-
சிறைக் காவலர்களை உயர் அதிகாரிகளின் வீட்டு வேலைகளுக்கு பயன்படுத்தும் ஆர்டர்லி முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது என்று உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. விரைவாக நடவடிக்கை எடுத்த தமிழ்நாடு அரசுக்கு நீதிபதிகள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

புழல் மத்திய சிறையில் கைதிகளுக்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை எனக்கூறி தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், தமிழ்நாடு முழுவதும் உள்ள சிறை வார்டன்கள் மற்றும் காவலர்களை வீட்டு வேலைக்கு பயன்படுத்தும் அதிகாரிகள் குறித்து சிபிசிஐடி மற்றும் உளவுத்துறை உதவியுடன் விரிவான விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க உள்துறை செயலாளருக்கு அறிவுறுத்தியிருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், எம்.ஜோதிராமன் அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்த போது, அரசுத்தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆர்.முனியப்பராஜ், உள்துறை செயலாளரின் அறிக்கையை தாக்கல் செய்தார்.

அதில், உயர்நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் சிறைகளில் விசாரணை நடத்தப்பட்டதாகவும், விசாரணையின் முடிவில் எந்த சிறை அதிகாரிகளின் வீடுகளிலும் சிறைக் காவலர்கள் ஆர்டர்லிகளாக பயன்படுத்தப்படுவதில்லை என்பது தெரியவந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சிறைக் காவலர்களை உயர் அதிகாரிகளின் வீட்டு வேலைகளுக்கு பயன்படுத்தும் ஆர்டர்லி முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதாகவும் ஆர்டர்லி முறை குறித்து எதிர்காலத்தில் புகார் வந்தால் அது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதனையடுத்து, ஆர்டர்லி முறையை ஒழிக்க விரைவாக நடவடிக்கை எடுத்த தமிழ்நாடு அரசுக்கு பாராட்டு தெரிவித்த நீதிபதிகள், இதுதொடர்பான வழக்கை முடித்து வைத்தனர்.

---

## திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா 56ஆம் ஆண்டு நினைவு நாள் ஊர்வலம்!

### பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெறுகிறது!

திருவண்ணாமலை, பிப். 1-
திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 56ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெறுகிறது. ஊர்வலத்திற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையேற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலக தமிழர்களின் உள்ளங்களிலெல்லாம் சிம்மாசனம் போட்டு, கொலுவீற்றிருக்கும் செந்தமிழறிஞர் - தமிழ்மொழி உணர்வுக்காகவும், தமிழர் மேம்பாட்டிற்காகவும், தமிழ்நாட்டின் சிறப்பிற்காகவும், வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்துவைத்த ஆற்றலாளர். இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்று தம்பியர் பெரும்படை கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன், மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்து, தாய்க்கு பெயர் தந்த தனி பெரும் தனயன் - சுயமரியாதை சுடரொளி சொக்கவைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேந்தர் - தென்னகத்தின் மிகப்பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெறவுள்ளது.

03.02.2025 திங்கட்கிழமை காலை சரியாக 9.00 மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி சிலை அருகில் இருந்து பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெறவுள்ளது. ஊர்வலத்திற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையேற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், சிவ.ஜெயராஜ், நகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அமைதி ஊர்வலத்தில் ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம்,பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு. அன்பழகன், எம்.சீனுவாசன், மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன், துணை மேயர் சு. ராஜாங்கம் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழக, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொள்கிறார்கள்.

---

## ஊரக வளர்ச்சி – ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்

# ககன்தீப் சிங் பேடி ஐ.ஏ.எஸ். தந்தையார் - மிகச் சிறந்த அறிஞராக விளங்கிய தர்லோச்சன் சிங் பேடி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, பிப். 1-**
**ககன்தீப் சிங் பேடி, ஐ.ஏ.எஸ். அவர்களின் தந்தையார் தர்லோச்சன் சிங் பேடி அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தி வருமாறு:-**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி அவர்களின் தந்தையார் தர்லோச்சன் சிங் பேடி அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஃபரித்கோட் அரசு கல்வியியல் கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய அவர், திருக்குறள் மீது மிகுந்த பற்று கொண்டவராக விளங்கினார்.

“மனிதர்கள் மீதான அன்பை மையப்படுத்தியதாகவே திருக்குறள் திகழ்கிறது; அதனையேதான் குரு நானக் அவர்களும் பரப்புரை செய்தார்” என்று கூறிய அவர், குறளின் கருத்துகளை எடுத்துச்சொல்லும் தூதுவராக, திருக்குறளைப் பஞ்சாபி மொழியில் மொழிபெயர்த்தார். அவரது இந்தப் பணி, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மிகச் சிறந்த அறிஞராக விளங்கிய அவரது மறைவு, தமிழ்நாட்டுக்கும் பஞ்சாப் மாநிலத்திற்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும். தந்தையை இழந்து வாடும் ககன்தீப் சிங் பேடி அவர்களுக்கும், அவரது பிரிவால் துயருற்றுள்ள அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், முதலமைச்சர் அவர்கள், ககன்தீப் சிங் பேடி அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தார்.

---

# ராணுவ ஓய்வூதிய வழக்குகளில் மேல்முறையீடு!

### ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு உச்சநீதிமன்றம் கண்டனம்!

புதுடெல்லி, பிப். 1 -
ஓய்வூதியம் தொடர்பாக, ஓய்வுபெற்ற ராணுவ வீரர்களுக்கு எதிராக தொடர்ந்து மேல்முறையீடு செய்யும் ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற ராணுவ வீரர் ஒருவருக்கு, மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம் வழங்கிய தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து ஒன்றிய அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் அபய் ஓகா, உஜ்ஜல் புயான் அமர்வுமுன்விசாரணைக்கு வந்தது. அப்போது, முப்படை தீர்ப்பாயத்தால் நிவாரணம் வழங்கப்பட்ட ஒவ்வொரு வீரருக்கு எதிராகவும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையிடு செய்து, அவர்களுக்கு சிரமம் அளிக்க வேண்டிய அவசியமில்லை. மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்வதில் ஒன்றிய அரசு விவேகத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். முப்படை வீரர்களின் ஓய்வூதிய விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும் முடிவை எடுப்பதற்கு முன் பல முறை சிந்திக்க வேண்டும். தீர்ப்பாயத்தின் நிவாரணத்துக்கு எதிராக, இதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்வதன் மூலம் முப்படைகளின் மனஉறுதி குறைய அனுமதிக்கக் கூடாது என்று ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவித்தனர். மேலும், இவ்விவகாரத்தில் ஒன்றிய அரசு ஒரு கொள்கையை உருவாக்குவது அவசியம் என்றும் ஒன்றிய அரசு அதற்கு தயாராக இல்லை என்றும் இதுபோன்று ஒன்றிய அரசு தாக்கல் செய்யும் முறையற்ற மேல்முறையீடு மனுக்கள் மீது அதிக அபராதம் விதிக்க நேரிடும் என்று நீதிபதிகள் எச்சரித்தனர்.

---

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா 56 வது நினைவு நாள் அமைதிப் பேரணி!


### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் அறிக்கை!

குமரி, பிப். 1-
காஞ்சி தந்த காவியத் தலைவர், தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும், வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர், தென்னகத்தின் மிகப்பெரும் அரசியல் தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதிப் பேரணியானது 03.02.2025, திங்கட்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று வடசேரியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படவுள்ளது.

ஆகவே கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.





கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் வியாழன் தோறும் மாநகராட்சி மக்களின் கோரிக்கைகளையேற்று அதற்கு உடனடி தீர்வு கிடைக்கும் வகையில் மக்கள் குறைதீர்க்கும் முகாம் நடைபெற்று வருகிறது. அதன்படி மக்கள் குறைதீர்க்கும் முகாம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலையில் நடைபெற்றது. முகாமில் துணை மேயர் ம.மேரி பிரின்சி லதா, உதவி ஆணையர் பாலசுந்தரம், நகரமைப்பு அலுவலர் வேலாயுதம், உதவி செயற்பொறியாளர் ரகுராமன் உட்பட அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து அனைத்துத் துறை அலுவலர்களுடன் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



---

பிப்ரவரி 3, பேரறிஞர் அண்ணா நினைவு நாள் :

# நினைவுகள் நம் நெஞ்சிலிருந்து நீங்கிடுமோ?



**மறப்போம், மன்னிப்போம் - என்ற மாண்பில்; எதையும் தாங்கும் இதயம் வேண்டும் - என்ற பூமிப் பொறுமையில்; ஆணை பிறந்து விட்டது, அழைப்புக் கிடைத்து விட்டது, அணிவகுப்பிலே வந்து சேர் - என்ற அன்பழைப்பில்; இப்படை தோற்கின் எப்படை வெல்லும் - என்ற அறைகூவலில்; மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு - என்ற அரசியல் நாகரிகத்தில்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - என்ற கழக இலக்கணத்தில்; கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு - என்ற சாந்தச் சிந்தனையில்; ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் - என்று உருகிடும் இரக்கத்தில் ;**

**ஒன்றே குலம், ஒருவனே தேவன் - என்ற பிரகடனத்தில் ; நேரு பண்டிதரோ கட்டி முடிக்கப்பட்ட கோபுரம், நானோ கொட்டிக் கிடக்கும் செங்கல் - என்ற ஆளுமை உயரத்தில்; நானோ மிகச் சாமானியன், தீர்க்க வேண்டிய பிரச்சினைகளோ மிக மிக அசாமானியமானவை - என்ற தன்னடக்கத்தில்; தம்பி வா, தலைமை ஏற்க வா - என்ற உயர்ந்த உள்ளத்தில்; ஏழை ஈடேற வேண்டும், ஏழை உரிமை பெற வேண்டும், ஜாதிபேதம் ஒழிய வேண்டும், ஒற்றுமை மலர வேண்டும் - என்ற இலட்சிய உறுதியில்;**

**பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிய நினைவு நம்மிடையே நிலைத்திருக்கிறது.**

தமிழ் நாடு - என்ற நம் தலைநிமிர்ப் பெயரும் ; தமிழ், ஆங்கிலம் - என்று இந்திக்கு நிரந்தரத் திரைபோட்ட இருமொழித் திட்டமும்; சுய மரியாதைத் திருமணச் செல்லுபடிச் சட்டமும்; அண்ணா அவர்களின் அரும்பெயரை ஆண்டாண்டுகளுக்கும் அனைவர்க்கும் நினைவூட்டிக் கொண்டே இருக்கிறது !

ஆற்றோரத்திலே ஒரு அருநெல்லி மரம், அங்கே ஆண்டவனுக்கு ஓர் ஆலயம், அருகிலே ஆணைக்கால் மண்டபம், அமுதவல்லி தன் ஆசை நாயகன் அரும்பு மீசை அறிவானந்தனுக்காக அலைக் கழிக்கப்பட்ட மனத்தோடு அமர்ந்திருந்தாள் - என்ற அண்ணாவின்

ஆரம்பகால அடுக்கு மொழியையும், அதை ஆவலுடன் கேட்டு ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்த அன்னைத் தமிழ்க் கூட்டத்தையும், நம் நினைவிலிருந்து அகற்றுதல் அவ்வளவு எளிதாமோ?

வேஷமணியாத வேதாந்தி, மோடி செய்யாத மாது, ஜோடி இல்லாத மாடப் புறா, சேடி இல்லாத ராஜகுமாரி; - என்ற அண்ணாவின் அழகுதமிழ், இன்றும் நம் நினைவில் நிழலாட வில்லையோ?

சண்டாளதெய்வமே! உனக்குக்கண் இல்லையோ? ஆயிரம்கண்ணுடையாள் என்று அர்ச்சிக்கிறார்களே உன்னை, அதில் ஒரு கண்ணால் பார்த்திருக்கக் கூடாதா இந்த ஏழைபடும் அவதியை? - என்று அண்ணா 75 ஆண்டுகளுக்கு முன்னரே எழுப்பிய அசைக்க முடியாத கேள்விக் குறியை, பகுத்தறிவு உலகம் இன்றும் பாராட்டி நினைவு கூர்கிறதே ?

நாடோடியாக இருந்து, இப்போது நாடாள வந்திருக்கிறான் - என்ற அண்ணாவின் எழுத்துகள், சாதாரண மனிதனுக்கும் சபை ஏறும் ஊக்கத்தை ஊட்டவில்லையா?

சட்டத்தின் கண்கள் சக்தி வாய்ந்தவை.நீதியையும், நியாயத்தையும் நிலைநாட்டுவது சட்டத்தின் கடமை.ஏழை என்பதற்காகச் சட்டம் இரக்கம் காட்டுவதில்லை; காசில்லாதவன் என்பதற்காகக் கருணை காட்டுவதில்லை. திருடினானா இல்லையா என்பதுதான் சட்டத்தின் கேள்வி.திருடுவதற்கான சூழ்நிலை என்ன என்பது கேள்வி இல்லை - என்ற அண்ணாவின் மொழியை, சட்டம் இன்றும் நினைவில் கொண்டல்லவோ இயங்குகிறது!

சட்டம் ஓர் இருட்டறை; அங்கே வக்கீலின் வாதம் ஒளி விளக்கு; ஏழையால் அதைப் பெற முடியாது - என்று அன்று அண்ணா சொன்னதை, இன்று யாரும் மறுத்திடல் ஆகுமோ? என்றும் நினைவில் நிலவும் உண்மை அன்றோ!

மாளிகை வேண்டாம், மாட்டுக் கொட்டகை போதும்! பட்டுப் பீதாம்பரம் வேண்டாம்,கட்டத் துணி இருந்தால் போதும்;

ஆந்தைகள் அலறுகிறதே என்பதற்காக, கிளிகள் தம் கொஞ்சு மொழியை நிறுத்தியா விடும்?;

இருதயத்துக்கும், இரும்புப் பெட்டிக்கும்தான் ஈஸ்வரன் தொடர்பு வைப்பதில்லையே;

என்பன போன்ற அண்ணாவின் வாதங்களை, எல்லாக் காலமும் நினைவில் கொண்டு, ஏற்றுக்கொள்ளத் தானே செய்யும்!

மனமாசு போக்க, ஒழுக்கத்தை வளர்க்க, துறவிகள் தேவை என்றால், புத்தர் போலப் போதிக்கட்டும் பற்றற்று.பசித்தால் புசித்து,வியர்த்தால் குளித்து, நிழல் கண்டால் படுத்து, செம்பொன்னும் ஓடும் ஒன்றெனக் கொண்டவர்களே துறவி என்று ஆன்றோரும் சான்றோரும் கூறுகின்றனர்;

நல்லறிவை நாத்திகம் என்கிறார், வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் வித்தியாசம் தெரியாததைப் போலே! நய வஞ்சகம் அல்ல நாதன் அருளைப் பெறும் வழி என்று கூறுவதா நாத்திகம்? அன்பும் அறமும் அளித்து, உண்மையை உணர்ந்து,தன்னலத்தைத் தகர்த்தெறிந்து, பொது நலத்துக்குப் பாடுபட்டு, நாட்டைப் பொன்னாடாக்கினால்,மக்களை வாழ வைத்தால்,இறைவன் அருளைப் பெறலாம் என்று எடுத்துக் கூறுவதா நாத்திகம்? எது நாத்திகம் ? அன்பையும் அருளையும் செலுத்திடச் செய்வதற்காக ஏற்பட்ட இடங்களிலே, அக்கிரமம் தலை விரித்தாடினால், அறம் அறிந்தோர் கண்டிக்காமல் இருக்க முடியுமா? கண்டிப்பதா நாத்திகம்?;

முளைவிட்ட கள்ளி காளான்களைக் காட்டுகிறோம், களைந்தெறியச் சொல்கிறோம்.வயல் உம்மிடம் இருந்தது, உபதேசம் என்ற ஏர்கொண்டு உழுதீர். மக்களின் உழைப்பு என்ற நீர் பாய்ச்சினீர்.முளைத்துக் கிடப்பதோ கள்ளி காளான்! தினை விதைத்தால்தானே தினை கிடைக்கும்;

**இப்படி எண்ணற்ற வளமார் வசனங்கள் அண்ணாவின் நினைவை எதிரொலித்த வண்ணம் உள்ளன.அண்ணாந்து பார்த்த மக்களின் செவிகளில் புதுமைப் பூந்தேன் பாய்ச்சியதோடு, அவர்தம் மனதில் புரட்சிகரமான எண்ணங்களையும் விதைத்தது; உறக்கத்தில் இருந்தோரையும்,மாயையில் மயங்கிக் கிடந்தோரையும், சிலிர்த்து விழித்து எழுச்சி கொள்ளச் செய்தது.**

**திராவிட இயக்கம் திக்கெட்டும் சென்று, மக்கள் இயக்கமாக உரு மாற்றம் பெற, பேரறிஞர் அண்ணா அவர்களின் அசல் உத்திகளும், பீடு நடை போட்ட பெருமை மிகு உரை நடைகளும், தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் முதல்முறை வித்தகமாக விளங்கின.அவை இன்றளவும் அண்ணா அவர்களின் நினைவை நம் நெஞ்சத்தில் அடர்த்தியாகப் பரப்பி, குளிர் நிழலாக நீண்டு,நெடிதுயர்ந்து, நிலைத்து நிற்கின்றன!**

★★★
**கி.இராஜமாணிக்கம்**
★★★